காத்தான்குடி நகரசபை-2013

---------------------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

-----------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 13 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 04 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டதாக்கத்தினைத் தவிர்த்து காத்தான் குடி நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------------

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

-------------------------------------------------------------------------------------------------------------

உள்ளுராட்சி மாகாணசபைகள் அமைச்சு செயலாளரின் 2014 சனவரி 27ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுகுறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் சபையில் உள்ளவாறு ரூபா.1,460,000 கிரயத்தைக் கொண்ட 23 கணனிகள் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.11,900,000 பெறுமதியான ''பெக்கோ'' இயந்திரம் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறவேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அறவிடப்பட வேண்டிய ரூபா.23,500 தொகையான வியாபார உரிமைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மரணமடைந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டியரூபா.42,037 கடன் மீதியை மரணப்பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2014 ஆகஸ்ட் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4. கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
| --- | --- | --- |
| | ரூபா | |
| காணிகட்டிடம் | 23,362,316 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதி இயந்திரங்கள் | 2,501,435 | நிலையான சொத்துப் பதிவேடுகள், மற்றும் மெய்மையாய்வு அறிக்கைகள் |
| மோட்டார் வாகனங்கள் | 2,980,814 | |
| தளபாடம் பொருத்துகள் | 2,937,684 | |
| அலுவலக உபகரணங்கள் | 494,595 | |
| நூலக புத்தகங்கள் | 1,251,373 | |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) நகரசபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 255) | |
| (i) பிரிவு 177(2) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கம் பொதுமக்களின் தகவலுக்காக அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு |

| | |
|---|---|
| | சபையால் 2014 யூலை 31ஆம் திகதி வரைநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) பிரிவு 180(1) | ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் சபையின் தவிசாளரால் விரிவான வருடாந்த நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான அறிக்கை மீளாய்வாண்டில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) பிரிவு 227(1) | நகரசபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சபை தொடர்பான ஒப்பந்த வேலைகளில் ஈடுபடலாகாது. இதற்கு முரணாக சபையின்தவிசாளரின் சகோதரருக்கு சொந்தமானவான் சபையால் வாடகைக்கு அமர்த்தப்பட்டு ரூபா.53,595 தொகை வாடகை கட்டணமாக மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்.

----------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2013 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டு வரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா.4,444,446 ஆகும். இதற்கெதிராக முன்னைய ஆண்டின் பெறுபேறு வருமானத்திலும் கூடிய மீண்டு வரும் செலவினமாக ரூபா.64.660ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா.4,509,106 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | அறவீடு செய்யப்பட்டது | வித்தியாசம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| வீத வரிகள் | 7,500,000 | 6,807,470 | 692,530 | 9.2 |
| சேவைக்கட்டணம் | 5,825,000 | 4,235,892 | 1,589,108 | 27.3 |
| பற்றானைச் செலவு | 2,575,000 | 2,506,094 | 68,906 | 2.7 |
| முத்திரைக் கட்டணம் | 5,200,000 | 3,688,199 | 1,511,801 | 29.1 |

2.2.2 வீதவரிகள் மற்றும் வரிகள்

நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 160 ஆம் பிரிவுக்கு அமைய, நகரசபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2013 ஆம் ஆண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டியரூபா.4,389,991 கூட்டுமொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

-------------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றத்திடமிருந்து 2013 திசெம்பர் 31இல் கிடைக்கவேண்டியரூபா.749,294 தொகை மாகாணசபையின் பிரதமசெயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு உரியநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திருகோணமலைக்கும் கிண்ணியாவிற்கும் இடையேபயணிகள் சேவையை நடாத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு அவற்றிற்கிடையே பாலம் நிர்மாணிக்கப்பட்ட பின் கைவிடப்பட்ட பிரயாணிகள் படகு (Passenger Ferry) ரூபா.323,550 செலவு செய்து காத்தான்குடிக்கு கொண்டுவரப்பட்ட போதிலும் இரண்டு வருடங்களுக்கு பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் உள்;ராட்சி மன்றங்களின் ஒய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு தவறியதனால் 1995 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரைரூபா.2,375,058 பங்களிப்புபணத்தை செலுத்தவேண்டி உள்ளது.

(இ) 1987 ஆம் ஆண்டுபிரதேசசபைகள் உருவாகுவதற்கு முன்பு பட்டினாட்சி மன்றமாக செயற்பட்ட காலத்தில் இலங்கை மின்சார சபை சார்பாக பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குதல் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுதொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

.

(i) இலங்கைமின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா.2,399,352 முற்பணங்களை அறவிடுவதற்கு சபையால் 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மின்சாரம் வழங்கியவகையில் பொதுமக்களால் மின்சாரசபைக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா.6,642,880 மின்சார நிலுவையை அறவிடகடந்த 20 வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பெக்கோலோடர் இயந்திர கொள்வனவு

------------------------------------------------------------------------

சபையால் மீளாய்வாண்டில் ரூபா.11,900,000 கிரயத்தில் "பெக்கோலோடா;"(JCBமாதிரிJCB 3CX 4WD)கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெக்கோ இயந்திரகொள்வனவு தொடர்பான கூறு விலைகள் திறத்தல் குழு உறுப்பினர்களால் 2013 மார்ச் 06 இல் திறக்கப்பட்ட போதிலும், திறத்தல் குழுவின் உறுப்பினரான சபையின் செயலாளர் திறத்தல் குழு நடவடிக்கைகளில் சமூகமளித்து கையொப்பம் இட்டிருக்கவில்லை.

(ஆ) இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு பெறப்பட்ட கூறு விலைகளில் இரு நிறுவனங்கள் குறைந்த விலையை குறிப்பிட்டிருந்த போதிலும், அதிகூடியவிலையினைக் குறிப்பிட்ட நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இயந்திரம் ஐக்கிய இராச்சியத்தில் தயாரிக்கப்பட்டிருந்தமையால் கூடியவிலையான ரூபா.11,900,000 இற்கு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாதிரி "JCB 3DX Super" இயந்திரத்தை கொள்வனவு செய்திருந்தால் ரூபா.2,740,000 ஐ சேமித்து இருக்கமுடியும்.

(இ) உடன்படிக்கையின் படி, விநியோக நிறுவனத்திடமிருந்து இலவச பராமரிப்புச் சேவை (Free Service) கிடைக்க கூடியதாக இருந்த போதிலும் ரூபா.186,696 செலவில் சபை நிதியிலிருந்து மீளாய்வாண்டில் இயந்திரத்திற்கு இரு தடவைகள் பராமரிப்பு சேவை செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மண்முனைப்பற்று பிரதேசசபையால் மீளாய்வாண்டில் அதே நிறுவனத்திடம் இருந்து அதேமாதிரியைக்கொண்ட "பெக்கோலோடா;" இயந்திரம் ரூபா.11,800,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

3.3 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------

(அ) சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகளைஅட்டாளைச்சேனை பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள"Engineered Landfill Facility" என்ற இடத்திற்கு கொண்டு செல்வதற்கு தனிப்பட்ட உரிமையாளர்களின் "டிப்பர்"ரகவாகனங்கள் ரூபா.2,309,150 கிரயத்தில் மீளாய்வாண்டில் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஐந்து சந்தர்ப்பங்களில் அட்டாளைச்சேனை பிரதேசசபைக்கு சொந்தமான கழிவுகள் கொட்டும் இடத்தில் குப்பைகளை கொட்டியதற்காக ரூபா.225,000 தொகை வாடகைக் கூலியாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்விடத்தில் குப்பைகள் கொட்டியதற்கு ஆதாரமாக பற்றுச்சீட்டுகள் சம்பந்தப்பட்ட வாகன உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கேள்வி கோரல் நடைமுறைகள் பின்பற்றப்படாமல் ஒரு சந்தர்ப்பத்தில் சபை சார்பாக ஒப்பந்தவேலைகளில் ஈடுபடும் நபருக்கு ரூபா.448,800 தொகை குப்பைகளை ஏற்றி இறக்கியமைக்காக "டிப்பர்" வாடகைக் கூலியாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) "பிலிசரு" திட்டத்தின் கீழ் கூட்டுப்பசளை தயாரிப்பதற்கான நிலையம் ரூபா.1,669,227 கிரயத்தில் மீளாய்வாண்டில் அமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கூட்டுப் பசளை நிலையம் அமைப்பதற்காக ரூபா.6,500,000 கிரயத்தில் பொதுமக்களின் பன்னிரெண்டு காணித்துண்டுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருந்தபோதிலும் காணியின் தற்போதைய சந்தை விலைவிலை மதிப்புத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ii) காணி உறுதிகள் எழுதுவதற்கான கட்டணமாக ரூபா.326,500 காணி உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படாமல் சபை நிதியிலிருந்து ஒரு தனிப்பட்ட சட்டத்தரணிக்கு வழங்கப்பட்டிருந்தது.

4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

------------------------------------------------------------

4.1 உள்ளகக் கணக்காய்வு

------------------------------------

ஓவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு ஏற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டதற்கமைய சபையில் உள்ள ககணக்காய்வு பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ள படியான செலவினத்திற்கும் இடையில் 47% தொடக்கம் 85% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒருவினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேடகவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) ஒப்பந்த நிர்வாகம்

(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) வருமான முகாமைத்துவம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு